5. அரசினர் சட்டமுன்வடிவு.

நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு, 1989

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 7/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, மற்றும் அட்டவணை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவை யின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

''தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 7/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்''.

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

6. வரவு-செலவுத் திட்டம், 1989-90 பொது விவாதம்—தொடர்ச்சி.

*திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரவு—செலவுத் திட்டத்தில் என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்த உங்களுக்கும், இந்த சபையில் உள்ள அத்தனை பேர்களுக்கும் நன்றி சொல்லிக் கொண்டு, இங்கே எனக்கு முன்னால் உட்கார்ந்திருக்கின்ற முதலமைச்சர் அவர் களையும், அவை முன்னவர் அவர்களையும் நான் பார்க்கிறேன். இதற்கு முன்னாலே கவர்னர் உரை நடந்த நேரத்தில் அமைதி யோடும், பொறுமையோடும் இருந்த முதலமைச்சரை இன் றைக்கு என்னால் பார்க்க முடியவில்லை. அதற்குக் காரணம் நடந்து முடிந்த இரண்டு இடைத் தேர்தல்கள் என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே பணிவன்போடு சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். பொதுத் தேர்தல் முடிந்தவுடனே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்து மக்கள் எல்லாம் தன் மீது பாசத்தோடு வாக்களித்து விட்டார்கள், இனிமேல் நம்முடைய